பரணியின்
சண்டிராணி
தயாரிப்பு... ராமகிருஷ்ணா

நடிக நடிகைகள்

ஸ்ரீமதி பானுமதி	... ...	சண்டி, சம்பா
ஸ்ரீ என். டி. ராமாராவ்	... ...	கிஷோர்
எஸ். வி. ரங்காராவ்	... ...	பிரசண்டன்
ரேலங்கி	.. ..	முகுந்தன்
துரைஸ்வாமி	.. ..	ராம்சிங்
அமர்நாத்	.. ..	சுகுமார மன்னர்
ஆர். நாகேஸ்வர ராவ்	...	மார்த்தாண்டன்
கே. எஸ். என். சாஸ்திரி	... .	மந்திரி
ராஜ்குமார்	.. ..	துரை
கே. என். வெங்கட்ராமன்	...	கோவிந்தன்
கணபதிபட் & சௌதரி	...	காட்டு வாசிகள்
ராவுலபல்லி	.. ..	காவலாளி
ஸ்ரீமதி வித்யாவதி	... ...	காந்தா
குமாரி துளசி	.. ..	கலா
ஹேமலதா	.. ..	கிழவி
அங்கமுத்து	.. ..	தோழி

மற்றும் பலர்

பின்னணி :

கண்டசாலா : ராணி : ஜமுனா

எ. பி. கோமளா : ஸரோஜினி

சண்டிராணி

[கதைச் சுருக்கம்]

சுகுமார மகாராஜா தனது இருபத்தி ஐந்தாவது வருஷ பிறந்த நாள் கொண்டாட்டத்தை மக்களுடன் கலந்து மகிழ, மாறு வேடத்துடன் நகரைச் சுற்றி வரும்போது, கலா என்னும் கிராமியச் சிறுமியைக்கண்டு காதலிக்கிறார். அவளையே தன் பட்டத்து ராணியாக்க திட்டம் போடுகிறார். ஆனால், சேனாதிபதி பிரசண்டனும் அதே பெண்ணின்மேல் ஆசை கொண்டதால் எதிர்க்கிறான். ஆனால் மன்னர், பிரசண்டன் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் மக்கள் சம்மதத்துடன் கலாவை மணக்கிறார். அதனால் ஏற்பட்ட பகையே பிரசண்டனை கல் நெஞ்சனாக்குகிறது. நல்ல சமயத்துக்காக காத்திருக்கும் நயவஞ்சகனுக்கு ராணியின் பிரசவம் தகுந்த சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது. இரட்டைக் குழந்தைகளுக்குத் தாயான ராணியை வைத்தியர் மூலம் கொல்கிறான். அதே ஏக்கமாக உள்ள மன்னரை பைத்தியம் என்று சிறையில் அடைக்கிறான். பிறகு இரட்டைக் குழந்தைகளை கைப்பற்ற திட்டம் போடுவதை, உண்மைச் சேவகன் ராம்சிங் மூலம் உணர்ந்த மந்திரி, காப்பாற்ற முயற்சிக்கிறார் .... ஒரு கிழவியின் மூலம் ஒரு குழந்தையை வெளியே அனுப்பிவிடுகிறார். மற்றொரு சிசுவை அப்புறப்படுத்தும்போது, பிரசண்டன் வாளுக்குப் பலியாகிவிடுகிறார் மந்திரி. தன் மகன் கிஷோரையும், இளவரசிகளையும் காப்பாற்றி நாட்டை மீட்கும்படி ராம்சிங்கிடம் சொல்லி உயிரை விடுகிறார் மந்திரி. பிரசண்டன் தன் கையில் சிக்கிய ஒரு இளவரசியின் மெய்க் காப்பாளனாக தேசத்தின் மன்னனாகிறான்.

* * * * *

பல வருஷங்கள் செல்கின்றன...காட்டிலே உள்ள இளவரசி சண்டி, காட்டுப் பறவைபோல் சுதந்திரமாக வளர்கிறாள். நாட்டிலே பிரசண்டன் கையிலகப்பட்ட சம்பாவோ கூண்டுக் கிளியாக வாடி வதங்குகிறாள். ராம்சிங்கால் ரகசியமாக வளர்க்கப்படும் கிஷோர்... பெரிய விரன். பிரசண்டன் மக்களைத் துன்புறுத்தி தன் ஆசை நாயகி காந்தாவின் பூனை கல்யாணத்துக்கு வரி போட்டதைக் குறித்து எதிர்த்து போராடும்போது ராம்சிங், கிஷோரைத் தனியாக அழைத்து அவன் மந்திரி குமாரன் என்றும், அவன் செய்யவேண்டிய கடமை என்னவென்றும் சொல்கிறான். கிஷோர் கடமையை உணர்ந்து,

பிரசண்டனின் முட்டாள் மகன் முகுந்தனை ஏமாற்றி, அரண்மனையில் வேலைக்கமர்ந்து, சம்பாவைச் சந்திக்கிறான்...கிஷோர், சம்பா இருவரின் முதல் சந்திப்பே இருவர் மனதையும் ஒன்றுபடுத்துகிறது. ஆனால், கிஷோர் தன் எண்ணத்தை வெளிக்காட்டாமல் சண்டியைச் சந்திக்க காட்டுக்குச் செல்லுகிறான்.

* * * * *

கிஷோர், சண்டியை சந்தித்து, அவளுடைய துணிச்சல், தைரியம் கண்டு சந்தோஷப்படுகிறான். அவள் உதவியிலே பிரசண்டனைக் கொன்று, நாட்டை மீட்க முடியும் என்கிற நம்பிக்கை பிறக்கிறது கிஷோருக்கு...சமயம் வந்தவுடன் நாட்டிற்கு அழைத்துச் செல்வதாக வாக்களித்து அவள் குறும்புத்தனத்துக்கு பரிசாக ஒரு குரங்கு பொம்மையை கொடுத்து திரும்புகிறான் கிஷோர். சண்டி, கிஷோர்மேல் மனதைப் பறிகொடுக்கிறாள்...கிஷோர் அவளுடன் சந்தோஷமாகப் பேசுவதை, பரிசு தந்ததை, தவறாகப் பாவித்து, தன்னைக் காதலிப்பதாக நினைக்கிறாள். ஆனால் துரை என்னும் காட்டுத் தலைவன் சண்டி மேல் மோகம்கொண்டு, பலவிதமாக முயற்சிக்கிறான். சண்டி கிஷோரிடம் பழகுவதைக்கொண்டு, பலாத்காரத்துக்குத் துணிந்து சண்டியிடம் உதை வாங்குகிறான். அதனால் கோபம் கொண்டு, துரை தன் ஆட்களுடன் சண்டி வசிக்கும் குடிசையைக்கொளுத்த, பாட்டி அதற்குப் பலியாகிறாள்...சாகும் பாட்டியின் சொற்படி சண்டி நகரத்திற்கு வருகிறாள்...

நகரத்தில் பல குறும்புகள் செய்து தப்பித்துக்கொண்டு வரும்போது கோட்டை தெரிய, சண்டி அங்குபோய் தன் சகோதரியைச் சந்திக்கிறாள். சம்பாவின் கஷ்டத்தையும், பிரசண்டனின் மகன் முகுந்தன் தினம்வந்து தன்னை மணக்கும்படி தொந்திரவு செய்வதையும் உணர்ந்து சண்டி, சம்பாவாக அங்கே இருக்க, சம்பா சண்டி உடையில் ராம்சிங் குடிசையைத் தேடி வருகிறாள். கோட்டை வாயில் காவலர்கள் சம்பாவை மிரட்டும்போது, கிஷோர் அங்கு வந்து அவளை மீட்டு ராம்சிங் குடிசைக்கு அழைத்துச் செல்லுகிறான்...

இப்படியிருக்க, நாட்டின் நிலைமை வேறு மோசமாகிறது; பிரசண்டனின் அட்டூழியம் அதிகரிக்கிறது. சண்டி பேசாமல் இருப்பது தவறென்று. சிறையில் வாடும் தந்தையைப் பார்க்க, முகுந்தனை கருவியாக உபயோகப்படுத்துகிறாள். அவனோடு சகஜமாகப் பழகி, தந்தையிடம் அழைத்துப் போகும்படி வேண்டுகிறாள். முட்டாள் முகுந்தன், திருட்டுத்தனமாக சண்டியை அழைத்துப்போக, வாசலில் காவல் காக்கும் தாதியை மிரட்ட, தன் நண்பன் கோவிந்தனை புலி வேஷம் போடச் சொல்கிறான். கோவிந்தன் புலி வேஷத்தில் பிரசண்டன் புலியுடன் விளையாட, அப்புலி கூண்டைவிட்டு வெளியே வருகிறது. நிஜப்

புலியை, முகுந்தன் பொய் புலி என்று நம்பி, அத்துடன் சண்டிமுன் வருகிறான். சண்டி உண்மை உணர்ந்து, புலியைக் கொல்கிறாள். சண்டி புலியைக் கொன்றதால் பெருத்த பரபரப்பு உண்டாகிறது. பிரசண்டன் உண்மையை உணர, சண்டி, தந்தையைப் பார்க்க உத்தரவு தருகிறான். சண்டி (மன்னரை), தன் தந்தையை சந்திக்கிறாள். தன் பிதாவின் பரிதாப நிலை அவள் உள்ளத்தை உருக்குகிறது. அவர் மூலம் தன் அந்தப்புரத்தில் உள்ள ரகசிய வழியைத் தெரிந்து கொள்கிறாள். சற்று தாமதித்து வந்த பிரசண்டன் சண்டியை வழிமறித்து, தந்தையிடம் பேசியதைக் குறித்து கேட்க, சண்டி முகுந்தனை மணக்க சம்மதித்ததாகச் சொல்லுகிறாள். பிரசண்டன், மன்னர் சம்மதிக்காவிட்டாலும், முகுந்தனை மணக்கத்தான் வேண்டும் என்று சொல்லி, திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறான். ஆனால் அவன் மிரட்டலுக்குப் பயப்படாமல், தந்தையை சந்தித்ததை சகோதரிக்கு தெரிவிக்க சண்டி ஆனந்தத்துடன் செல்கிறாள். ஆனால் அங்கு சென்றதும் அவள் கண்ட காக்ஷி, அவள் கட்டியகோட்டை, காதல் கனவு, எல்லாவற்றையும் உடைத்துவிடுகிறது...யார் தன்னை காதலிப்பதாக எண்ணினாளோ யாருடைய நன்மைக்காக பல சொல்களுக்கு உள்ளானாளோ, அவர்கள் இருவரும், அதுதான் கிஷோரும் சம்பாவும் ஒருவரையொருவர் நேசித்து உறவாடுவதைக் காண்கிறாள் ...நெஞ்சுடைந்து, தன் கடமையை மறந்து, திரும்பி வேதனையில் தவிக்கும்போது, முகுந்தன் அங்கு வர, அவனை விரட்டி அடிக்கிறாள். அதனால் தவிக்கும் முகுந்தனை கோவிந்தன் சமாதானப்படுத்தி சம்பாவைப்போல் வேறொரு பெண் இருக்கிறாள் என்று கிஷோர் உள்ள இடத்திற்கு அழைத்துச் செல்கிறான், இதன் மூலம் உண்மை உணர்ந்த பிரசண்டன், கிஷோரையும், ராம்சிங்கையும், சம்பாவையும் கைது செய்கிறான்.

அந்தப்புரத்தில் பலத்த காவல் வைத்து, முகுந்தன் சம்பா மணத்துக்கும், மன்னர், கிஷோர், ராம்சிங் இவர்களை தந்திரச் சுவர் மத்தியில் வைத்து, நசுக்கிக் கொல்லவும் ஏற்பாடு செய்கிறான்.

சம்பா, முகுந்தன்
திருமணம் நடக்கிறதா...?

மன்னர், கிஷோர், ராம்சிங்
இவர்கள் கதி என்ன...?

விராங்கனை சண்டி......
என்ன செய்கிறாள்...?

என்பதை வெள்ளித்திரை
விளக்கும்.!

பாட்டுகள்

தெரு கோரஸ்

ஆண்கள் :

அன்பாய்த் தேசமெங்கும் ஒன்ருய்க் கூடிமிகப்
பண்பாய்ப் பாடும் திருநாள்—நம்மைக் கண்போல்
காக்கும் மன்னர் தன்பேர் ஓங்கப் புகழ்கொண்டாடும்
புனித நாள் (அன்பா)

மாநிலம் புகழ் மாசிலா மகிபனே—இறைவனே—வளர்
மாமதிபோல் நீடுழிகாலம் பாரில் வாழ்கவே—ஹேய்—
காணும் வெங்கலி தீரவும், கலைவளம்—பொதுநலம்
குறையாதுறவே என்னுளும் நன்மையாவும் சூழவே
நன்மையாவும் சூழவே

பெண்கள் :

விண்ணுடுபோலே என்னுளும் பாரில்—
நம்நாடு வாழவே கொண்டாடுவோம்—நாம்
கொண்டாடுவோம்
பண்ணேடு பாடி, மண்மீதிலே—மன்னர்
பல்லாண்டு வாழவே கொண்டாடுவோம்



ஒரு பெண்:

வாராமலே வந்த
நாளிதே—சுபநாளிதே
எதிர்பாராத ஆனந்த நாளிதே—இந்த
ஊரார் கொண்டாடும் பொன்னுளிதே—என்றும்
(வாராமலே)

பாரிலே—நேரில்லா வீரனுய்
பாங்குடனே—செல்வம் யாவும்கொண்டே
அன்பு மாருமலே எந்த நாளுமே மன்னர்
சீரோடுதான் வாழவேணுமே!

—

காந்தாவின் நடனப்பாட்டு

மாவிநோத மாசிலாத மதனு காதல் மாரா மோஹனு
வாழ்வின் ஜீவனே—நான் வணங்கும் தேவனே—விசு
வாசமேவும் ஆசைநேச வடிவே எந்தன் அழகின்
தாஸனே
(மாவிநோத)
அல்லி மலர் நானே—ஓ!
குளிர் அம்புலியும் நீயே—ஓ
எழில் ஆதவன் நீ—செழுந்
தாமரை நான்
எனதாருயிர்க் காவலனே!



அல்லி மலர் நானே ஓ
குளிர் அம்புலியும் நீயே—ஓ!
எழில் ஆதவன் நீ
—செழுந்தாமரை நான்
எனதாருயிர்க் காவலனே!

—

பூனைக் கல்யாணப் பாட்டு

1 பெண் :

மியாவ்! மியாவ்! மியாவ்! டிங் டிங்
மியாவ்! மியாவ்! மியாவ்!
வெளுப்பாயிருக்குது என்பூனை—மிக
கருப்பாயிருக்குது உன்பூனை (மியாவ்)

2 பெண் : மியாவ்! மியாவ்! மியாவ்! டிங் டிங்
மியாவ்! மியாவ்! மியாவ்!
கருப்பாயிருப்பினும் என்பூனை—மிக
கருத்தாயிருக்கும் பெண்பூனை (மியாவ்)

1 பெண். சொட்டைத்தலையும்
சுருங்கிய கண்ணும்
ஜோராயிருக்குது பாரு
—கன ஜோராயிருக்குது பாரு

2 பெண்:

தொட்டிக்காலும்
துக்குணி வாலும்
தொந்தி வயிறும் பாரு—அதன்
மந்தி முகமும் பாரு

1 பெண்: எட்டுக்காலு பூச்சியைப் போல
இருக்குது பார் உன் பூனே

2 பெண்: குட்டிச்சாத்தான் பொம்மைப் போலே
குதிக்குதுபார் உன் பூனே

1 பெண்: மிக அவலட்சணம் உன்பூனே
அதைவிட லட்சணம் என்பூனே

1 பெண்: உ ஹூம் என் பூனே

பெண்: ஹூஹூம் என் பூனே

3-வது பெண்:

வேண்டாம், வீண் சண்டை, விரோதமே ஆகாது

ஆண்டவன் படைப்
பினிலே, அழகில்லா
உயிரேது

வானில் காணும்
தாரகைபோலே

வடிவழகே உன்பூனே



மேகம் போலே
கருப்பானாலும்—
மேலானது

உன்பூனே—மிகமேலானது உன்பூனே
ஹா ஹா ! உன்பூனே ஹா ஹா ! உன்பூனே
மியாவ்! மியாவ் ! மியாவ் டிங் டிங்!

,, ,, ,,

3 பெண் மேலானது உன்பூனே—மிக
மேலானது உன்பூனே
லாலல்ல ! லாலல்ல

—

சம்பா

என் வாழ்வெல்லாம் சிறைவாசமோ
இனிமேல் விமோசனமேதும் ஆகாதோ (என்)

பொன் கூண்டிலே கிளி தன்னேயே வைத்துப்
பூட்டியதுபோலே

எதை வேண்டி, என் மனம் வேதனே மிகவே
செய்கிறுர் வீணே ! (என்)

அகல் வானிலே சிறு காகமும் மனம்போல் உலாவிடுதே
உயர்மானிட ஜென்மமாகியும் உரிமை சிறிதும்இல்லேயே(எ)

சண்டி

என் வாழ்வினிலே நான் மகிழும் நாளிதுவேதான்
ஆஹா இன்பம் ஆனதுவே
மலரும் மாருதமும் குலவும் நேரமிதே
மனோஹரந்தானுகும்
மனமே காதல் இசைபாடுதே—
ஆஹா இன்பம் ஆனதுவே

ஓ........ஆனந்தமாக என்றும்
வானத்து ராணியைப்போல் காணும் புருவே
ஓ....ஏனோ சோகமே
உண்மையைக் கூறிடுவாய் உந்தன் ஜோடியாரோ
ஓஹோ பேரைச்சொல்ல வெட்கமோ
உன்போல் நானும் பெண்ணல்லவோ (என்)

ஓ....வாய்மொழி மாறுவதேன்
மால்விழி சோறுவதேன்....காரணம் யாதோ
ஓ....தென்றல் வீசவே
மனதில் என்றுமில்லா இன்பம் காண்பதேனோ
மலரும் ப்ரேமை செய்யும்
மாயமோ
ஆஹா இன்பம் ஆனதுவே (என்)

—



சண்டி

நிலா நிலா ஓடிவா,
நில்லாமல் ஓடிவா
நேரில் கண்டதெல்லாம் நீ சொல்ல வாவா (நிலா)

வளரும் காதலுக்கேநீயே ஒரு சாட்சி
மறையும் ஆசைக்கெல்லாம் நீதான் அத்தாட்சி
மனமதிலே என்றும் மாருத காட்சி (நிலா)

மணலில் வீடுகட்டி, விளையாடும் பிள்ளை
மனம்போல் நான் மகிழ்ந்தேன் பேதை உள்ளம்
எனை மறந்தால் ஏது வாழ்வில் இன்பம் (நிலா)

சம்பா

இன்னதென்றறியாமல்
உன்னையும் உணராமல்
ஏனிந்த ஆனந்தமே

கன்னங்குழிய நகை
கண்களிலே உவகை
சின்னஞ்சிறு சிட்டுபோல்
திரிய நினைக்கும் வகை

கருதிய வினையெல்லாம்
கைகூடாமலே
கட்டழகன் கருத்தை
புரிந்துகொள்ளாமலே
பருவத் துடிப்பினுலே முன்பின் எண்ணுமலே
பட்சம் வைத்தே அவர்பால் லஜ்ஜையில்லாமலே
ஏனிந்த ஆனந்தமே.

—

கிஷோர் - சம்பா

கிஷோர் : வான் மீதிலே
இன்பத் தேன்மாரி பேயுதே
சம்பா : வண்ணம்சேர் கலாமதி வீசுவெண்ணிலாவிலே
வான் மீதிலே!
கி : சுகாதீத மேவும் அனுராக கீதம்
ஸ்ருதியோடு பாடும் மதுவண்டு கேளாய்

ச : சதானந்த ஜீவிய கானம்
இதே!
ஓ ! வான்மீதிலே....

கி: வஸந்தத்தில் ஆடும்
மலர்ச்செண்டு நீயே
மையல்கொண்டு நாடும்
தமிழ்த்தென்றல் நானே !

ச : நிஜந்தான் என் ஆருயிர்
நீ, வாழ்வு நான்
வான் மீதிலே....

கி : மனம் ஒன்று சேர்ந்தே
உறவாடும் போது
மருவும் ஆனந்தம்
தனக்கீடு ஏது....

ச : இணை இந்த்ர போகமும்
ஆகாது....
வான் மீதிலே! (வான்)

ஹிஸ்மாஸ்டர்ஸ் வாய்ஸ்
ரிகார்டுகளில் இப்படத்தின்
பாடல்களைக் கேளுங்கள்

"HIS MASTER'S VOICE"

பட நிர்மாணர்கள்

எடிட்டிங் & தயாரிப்பு: ... ராமகிருஷ்ணு

வசனம்: .. .. உதயகுமார்

பாட்டு: .. .. கே. டி. சந்தானம்

சங்கீத டைரக்ஷன்: ... ஸ்வர்க்கீய ஸி. ஆர். சுப்பராமன்
... .. விஸ்வநாதன்

ஸி. ஆர். சுப்பராமன் வாத்ய கோஷ்டி

ஒளிப்பதிவு: .. .. பி. எஸ். செல்வராஜ்

ஒலிப்பதிவு டைரக்டர்: ... பி. வி. கோடீஸ்வர ராவ்

ரிகார்டிங்: .. .. திருநாராயண்

புரொடெக்ஷன் நிர்வாகம்: ... ... சம்பத்
... .. வெங்கட்ரத்னம்

ஸ்டில்ஸ்: .. .. ஜே. எஸ். ராஜு

மேக்கப்: .. .. மங்கையா
... வெங்கடேஸ்வரராவ்

ஆர்ட் டைரக்ஷன்: ... . ஏ. கே. சேகர்

செட் அலங்காரம்: ... ... கே.பி. சங்கரன் குட்டி

திரைக்கதை & டைரக்ஷன்: பி. பானுமதி

ஸ்டுடியோ: பரணி

வெஸ்ட்ரக்ஸ் ஒலிப்பதிவு முறையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது

BHARANI PRODUCTIONS
MADRAS

Printed at the B. N. K. Press, Ltd. Madras - 1